RECEIVED 1989-6-22 Periodicals Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 8 | துல்ஹஜ்ஜா 17 | இதழ் 34
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 22-06-1989

RECEIVED 1989-6-22 Periodicals Division

## "அமைதிப்படை விவகாரம் ஐ. நா. அவசியம் இல்லை"

(கொழும்பு)
இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையை வெளியேற்றும் விவகாரத்தை இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச்செல்லாது என்று வெளிநாட்டமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்

(7-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் செய்தி
### 'பிரேமா'வுக்கு அனுப்பப்பட்டது

(புதுடில்லி)
இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையை உடனடியாக விலக்கிக் கொள்ள முடியாது என்ற தமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதிக்கு நேற்று மாலை அனுப்பிவைத்த உத்தியோக பூர்வசெய்தியில் தெரிவித்துள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# "ஈழத்தமிழருக்கு தனி ராஜ்யம்: இந்தியா தயாராக வேண்டும்!"

## பத்திரிகைகள் வலியுறுத்து

(புதுடில்லி)
**இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளைப் பிரித்துத் தமிழர்களுக்கு தனியான நாடொன்றை உருவாக்க இந்திய அரசாங்கம் தயாராக வேண்டுமென்று இந்தியாவின் பிரபல பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.**

சைப்பிரஸ் நாட்டில் சிறுபான்மை மக்களுக்குத் தனி ராஜ்யம் ஒன்றை அமைத்து; துருக்கி ராணுவம் ஆக்கிரமித்ததுபோன்ற தீர்வு ஒன்றுக்கு இந்தியா தயாராக வேண்டும் என்று 'டைம்ஸ் ஒப் இந்தியா', 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஆகிய பத்திரிகைகள் தமது ஆசிரியத் தலையங்கங்களில் கருத்து வெளியிட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான 'டைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில்; ''இலங்கையிலுள்ள தமிழ்க் குழுக்களைச் சிங்களப் பெரும்பான்மையினருக்கு எதிரான ஒரு பொதுவான இலட்சித்

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும் நாளையும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)
கோரிக்கைகளை முன்வைத்து பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வரும் மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும் நாளையும் தமது வகுப்புக்களை பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழ மாணவர் ஒன்றி

(8-ம் பக்கம் பார்க்க]

## இணைப்புக்குழு அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் தொகையான இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர், நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்கள் மாணவர் சங்கங்

(8ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலிப் பகுதியில் நேற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாகவும், இச்சம்பவத்தில் சிலர் காயமடைந்திருக்கலாமென்றும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொழும்பு 'சார்க்' மாநாட்டில் அமைதிப்படை விவகாரம் எதிரொலிக்கும்

(காட்மாண்டு)
சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மகாநாட்டில் இந்திய அமைதிப்படை வாபஸ் தொடர்பாக சர்ச்சைகள் எழும்பலாமென அமைப்பு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

ஆகஸ்ட் முதலாம், இரண்டாம் திகதிகளில் இந்த மகாநாடு நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் நவம்பர்மாதம்

(7-ம் பக்கம் பார்க்க)

## கனடா அரசு தாராள உதவி

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள பாடசாலைகளைப் புனரமைப்பதற்காக கனேடிய அரசாங்கம் எட்டுக்கோடியே பத்து லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்திருக்கிறது.

## பருத்தித்துறையில் மோதல் பலர் காயம்; வீடுகள்சேதம்!

(வடமராட்சி)
பருத்தித்துறையில் நேற்று முன்தினம் மீண்டும் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் சிலர் படுகாயமடைந்ததாகவும் வீடுகள் சில சேதமடைந்ததாகவும் சிலர் உயிர் இழந்திருப்பதாகவும் அறியப்படுகின்றது.

வட இந்துமகளிர் பாடசாலைக்கு அண்மையிலுள்ள வி. எம். சந்தியில் இந்தமோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான செல்லப்பா சிவசுப்பிரமணியம் (வயது 50), நாராயண

(8-ம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சேவை நேற்றும் முற்றாக ஸ்தம்பிதம்!

(கொழும்பு)
கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதியில் பரவலாக நேற்றும் போக்குவரத்துச் சேவைபாதிக்கப்பட்டிருந்தது.

இதனால் அலுவலகங்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான அலுவலர்களே வேலைக்கு வந்திருந்தனர்.

போக்குவரத்துச்சேவை ஸ்தம்பிதமடைந்ததன்காரணமாக தென்பகுதி அலுவலங்கள் நண்பகலுடன் மூடப்பட்டன.

(2-ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கரை ஒதுங்கிய இந்திய இழுவைப் படகு!

(நெடுந்தீவு)
நெடுந்தீவு கடற்கரையில் கரையொதுங்கிய இந்திய இழுவைப்படகொன்று பெரும் பாறையுடன் மோதிக்கொண்டதில் இழுவைப்படகு பெரும் சேதமடைந்தது.

இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்ட இந்த இழுவைப்

(8-ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு அமுல்?

(கொழும்பு)
நாட்டிலுள்ள எந்தப் பகுதியிலும் எந்த நேரத்திலும் ஊரடங்குச் சட்டம் நாளை முதல் அமுலாகலாம் என்று பாதுகாப்பு வட்டாரம் 'ஈழநாடு' க்குத் தெரிவித்தது.

அவசரகால நிலைமைச் சட்டம் நேற்றுமுன்தினம் நாடு பூராவும் அமுலுக்கு வந்தது தெரிந்ததே.

நாட்டின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை கருத்திற்கொண்டு அவசரகால நிலைமைச் சட்டத்தின்கீழ், ஊரடங்குச் சட்டம் எந்தநேரமும் அமுலுக்கு வரலாம் என்றும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கை வான் பிரதேசத்தில் அந்நிய விமான ஊடுருவல்!

(கொழும்பு
இலங்கை வான் பிரதேசத்தில் இனம் தெரியாத அந்நிய விமானங்களின் ஊடுருவல் கடந்த சில மாதங்களில் அதிகரித்திருப்பதாக இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் வால்ரர் பெர்ணண்டோ கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வான் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களில் இனந்தெரியாத அந்நிய விமானங்களின் ஊடுருவல் அதிகரித்துள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல ஊடுருவல்களை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலுள்ள விமானப்போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலைய ...... செய்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யுடன் பேச்சுக்கள்: சபாநாயகர் அழைப்பு

(கொழும்பு)
எவ்வித நிபந்தனையுமின்றி ஜே. வி. பி. உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக பாராளுமன்றத்தில் சபாநாயகர் அல்

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதிக்கண்மையில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சி. இராசரத்தினம் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். சி-2986

பருத்தித்துறை வீதியில் நர்சிங்ஹோம் முன்னால் அமைந்துள்ள 2½ பரப்பு காணியும், பலாலி வீதியில், திருநெல்வேலிசந்திக்கு அண்மையில் அமைந்துள்ள 1¾ பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. சிவகுமார், 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-2994)

பாவித்த கதிரைகள், அலுமாரிகள் குசன், செற்றிகள், பல சட்டப்புத்தகங்கள் விற்பனைக்குண்டு. சி. சிதம்பரநாதன், அரசடி ஒழுங்கை, தாவடி வடக்கு. கொக்குவில். (சி-2985)

வட இந்தியா முறைப்படி சுத்தமாக தயாரிக்கப்பட்ட வெள்ளைப் பூடு அச்சார், தேசிக்காய் ஊறுகாய் எங்களிடம் கிடைக்கும். M. G. M. 777, K. K. S. Road, 208, 1st Cross st. Jaffna. (சி 2930)

### நாவல்கள்

மீராவெளியீடுகள் ''மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனி மலர்கள், முடிவல்ல ஆரம்பம்''. நாவல்களில் இணைக்கப்பட்டுள்ள கூப்பன்களைக்கொடுத்து ''மண்ணின் தாககம்'' சமூக நாவலை இலவசமாகப் பெறுங்கள். ''பாலைவனப் பயணிகள்'' மலிவுப் பதிப்பு 10/- சோதிட விலாச புத்தகசாலை, ராஜன் புத்தக சாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (சி-2982)


## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாக உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனத்தின் புதிய தலைவராக திரு. ஓ. தவகோபால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். செயலாளராக திரு.வ.சந்திரசேகரமும், பொருளாளராக திரு.ரி.வரதராசாவும், உப-தலைவராக திரு. சி. அப்புத்துரையும், உப-செயலாளராக திரு. வ. செகராஜசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குமென 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## முத்தமிழ்விழா

(பூநகரி)

ஜெயபுரம், பூநகரி பகுதிகளுக்கான முத்தமிழ் விழா, ஜெயபுரம் சர்வோதய நிலையத்தில், இணைப்பாளர் இரா. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. சர்வோதய கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். கேடெக்ஸ் ஸ்தாபன பிரதிநிதி திரு. எஸ். அரியரத்தினம் சர்வோதய புனர்வாழ்வு உத்தியோகத்தர் திரு. கு. சுமூகலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்கள்.


## அறிவித்தல்

### விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் கொடிவாரம்

23-06-89 முதல் 29-06-89 வரை நிகழவிருக்கும் மேற்குறித்த 'கொடி வாரம்' தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்படுகிறது, என்பதை, ஆதரவாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிரமங்களுக்கு மன்னிக்கவும்.

முகாமைக் குழுவினர்.

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை. (சி 2992)

## எமது முதலீட்டாளருக்கு

இலவசம்
ஆயுட்
காப்புறுதி

த பினன்ஸ்
கொம்பனி லிமிட்;

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடங்கள்- விவசாயபீடம் கிளிநொச்சி

இப்பல்கலைக் கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1989-ம் ஆண்டு யூலை மாதம் 17ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்: (1) தொழி நுட்பவலர் தரம் II பிரிவு''பி''
(2) தொழிலாளி தரம் III

சம்பள அளவுத் திட்டம்:
(1) ரூ. 2085 - 10 x 40; 7x50 - 2835/-மாதாந்தம்
(2) ரூ. 1375 - 3 x 30- 1465/- மாதாந்தம்

தகைமைகள்;

(1) தொழி நுட்பவலர் தரம் II பிரிவு ''பி''

இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் விஞ்ஞானம், கணிதம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

வயது: 40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு: தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு: தொழி நுட்பவலர் சேவை ''பி'' பிரிவின் கீழான நியமனம் முதலில் மாதம் ஒன்றிற்கு ரூ. 1975/- நிலையான சம்பளத்தில் மூன்றாண்டு காலத்திற்கு பயிற்சி பெறும்தொழிநுட்பவலர் என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

தகைமைகள்:

(2) தொழிலாளி தரம் III

ஏழாம் வகுப்பில் சித்தியடைநதிருத்தல் வேண்டும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் கிளிநொச்சியில் கட்டப்படவிருக்கும் விவசாய பீடத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூ. 20/- செலுத்தி இப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக்கிளையிலிருந்து பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை 23x10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு ரூ. 20/-அனுப்பிப் பெறப்படாத விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் குறித்த திகதியின்பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத்தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதில் பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி 300)


# "ஈழத்தமிழர் பிரச்னைக்கு உலகில் குரல் கொடுத்தவர்"

[யாழ்ப்பாணம்]

''ஈழத் தமிழருடைய பிரச்னைகளுக்கு சர்வதேச முக்கியத்துவம் ஏற்படக் காரணமாக இருந்தவர் அமரர் கந்தசாமி யாழ்.மாவட்ட தேசியகூட்டுறவுச்சபைத் தலைவர் திரு எஸ். சிவமகாராசா, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் நடைபெற்ற ரி. ஆர். ஆ. ஓ. கந்தசாமியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவமகராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழர்களுடைய நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்தவர் அமரர் கந்தசாமி இவரால் நிறுவப்பட்ட பல அமைப்புகள் இன்று இயங்கிக் கொண்டிருந்தாலும் எமது பிரச்னைகளை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்ற தமிழர் தகவல் நிலையம் இன்று இயங்காமல் இருப்பது கவலைககுரியது.

பேராசிரியர் சிவத்தம்பி தலைமையுரை நிகழ்த்துகையில் திரு. கந்தசாமி சர்வதேச மட்டத்தில் மனித உரிமைக்காகப் பாடுபட்டதுடன், சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல அமைப்புகளுடன்தொடர்பு கொடவர். தமிழ்மக்களுடன் இணைந்து, அவர்களின் தேவைகளை உணர்ந்து அகதிகள் நிறுவனங்களை ஆரம்பித்தவர் என்

(7-ம் பக்கம் பார்க்க)

# மந்திகை அரச ஆஸ்பத்திரிக்கு பிரான்ஸ் வைத்தியக் குழு ரூபா 10ஆயிரம் அன்பளிப்பு

[புலோலி]

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை மலசலகூட கழிவுக்குழிகள் பத்தாயிரம் ரூபா செலவில் சுத்திகரிக்கப்பட்டன.

பிரான்ஸ் தேசத்து வைத்தியக் குழுவினரால் இப்பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வாளி மலசலகூடங்களை அதிகமாகக்கொண்ட இவ் வைத்தியசாலைக் கழிவுக் குழிகளில் உள்ள கழிவுகள், அடைசல்கள் அப்புறப்படுத்தி வித்திகரிக்கும் வேலை கடந்த மூன்று தினங்களாக நடைபெறறன.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பும் பிரான்ஸ் தேச வைத்தியக் குழுவினரின் செலவில் இவ் வைத்தியசாலை மலசலகூடக் கழிவுக் குழிகள் சுத்திகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நூல்நிலையமும் வாசிகசாலையும்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ., நூல்நிலையம் ஒன்றையும், வாசிகசாலை ஒன்றையும் கடந்த வாரம் பண்டத்தரிப்பில் திறந்துள்ளது.

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தில் இயங்கிவரும் இந்த நூல் நிலையத்தில் பாடசாலை மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய தமிழ், ஆங்கில நூல்களும் உள்ளன.

## போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச்சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

கொழும்பிலும் நாட்டின் தென்பகுதியில் ஏனைய இடங்களிலும் ஒரு சில பஸ்களே சேவையில் ஈடுபட்டிருந்தன. இந்த பஸ்களும் இராணுவத்தினராலேயே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அத்துடன் மிகக்குறைந்த அளவுதனியார் பஸ்களே நேற்று சேவையில் ஈடுபட்டிருந்தன.

பிரயாணிகள் பெருமளவு எண்ணிக்கையில் மணிக்கணக்கில் பஸ் நிலையங்களில் காத்து நின்றதையும்' சேவையில் ஈடுபட்டிருந்த ஒரு சில பஸ்களின் கூரைகளின் பெருமளவு பிரயாணிகள் பிரயாணம் செய்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

ரயில் சேவையும் நேற்று முற்றுக செயலிழந்தது. நேற்றுக்காலையில் இரண்டு ரயில்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டதாக கொழும்பு வட்டாரங்கள தெரிவித்தன.

இதேவேளையில் போக்குவரத்துச் சபையின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி போக்குவரத்துச்சபை ஊழியர்களுடன் நீண்டநேர பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

## ராஜீவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறுகிய காலத்தில் இந்தியப்படையை விலக்கிக்கொள்ளத் தாம் தயராக இருப்பதாகவும் ஆனல் இலங்கை ஜனதிபதி கேட்டுக்கொண்டதன்பேரில் ஜூலை 27ம் திகதிக்கு முன்னர் விலக்கிக் கொள்ளமுடியாது என்று பிரதமர் திரு. காந்தி தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமைதிப்படை விலக்கிக் கொள்வதற்கு முன்னர் இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள இந்தியப்பிரதமர், இவ்விடயம் தொடர்பாகப் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் தம்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே. வி. பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊாஜ் எம். எச். மொகமட் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. அமைப்பினருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே. வி. பி.யினர் விரும்பும் ஓரிடத்தில் அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்குத் தாம் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

''இதன்பின்னர் தேவையானல் பாராளுமன்றத்தின் சகல அரசியல் கட்சி உறுப்பினர்களையும் சந்தித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்வேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாடு இப்போது ஒரு இக்கட்டான நிலையிலிருக்கிறது. 1948-ம் ஆண்டு சுதந்திரமடைந்தபிறகு நாடு இப்படி ஒரு அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்:

இந்த நிலைமையை ஒரு முடிவுக்குக்கொண்டுவரவேண்டும். நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும்'' என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவருக்கு எதிரான இராணுவ நடவடிக்கை அமெரிக்க-சீன உறவில் பெரும் விரிசல் தோன்றுகிறது

## ஜப்பானும் உதவிகளை நிறுத்த முடிவு

(வாஷிங்டன்)

**சீனவுடனை சகல உயர்மட்டத் தொடர்புகளையும் இடைநிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதற்கான அனுமதியை அமெரிக்க காங்கிரஸ் சபை அதிபர் புஷ்ஷிற்கு வழங்கியுள்ளது. இதே வேளை சீனவிற்கு வழங்கவிருந்த பெரும் நிதி உதவியை தற்காலிகமாக நிறுத்த ஜப்பானும் முடிவு செய்துள்ளது.**

சீனவில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கெதிராக அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளையும் அதன்பின் தற்போது அங்கு இடம்பெற்றுவரும் பழிவாங்கல் நடவடிக்கைகளையும் கண்டித்தே அமெரிக்க, ஜப்பான் அரசுகள் மேற்படி இடைநிறுத்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

உலக வங்கி, சர்வதேச செலாவணி நிதியம் போன்ற சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்கள் சீனவிற்கான சகல உதவிகளையும் ஒத்திவைக்கவேண்டுமென்றும் அமெரிக்கா கோரியுள்ளது, இதற்கான நடவடிக்கைகளில் அதிபர் புஷ் ஈடுபட்டுள்ளார்.

சீன அரசுடனை சகலஉயர்மட்ட பேச்சுக்களையும் ரத்துச் செய்யுமாறும் அமெரிக்க அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இது சீனஅரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான பதில் நடவடிக்கை என்று அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீனவிற்கு வழங்கவிருந்த பெரும் தொகை நிதி உதவியை யப்பான் அரசும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. ஐந்தரை ஆயிரம் மில்லியன் டாலர் உதவி அடுத்த ஆண்டுமுதல யப்பான் சீனவிற்கு வழங்கவிருந்தது. சீனவின் அரசியல் நிலைமை சரியாகும் வரை நிதி உதவிகள் எதனையும் வழங்கப் போவதில்லை என்றும் யப்பான் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிலைமை இவ்வாறு இருக்கையிலும் சீன அரசு ஜனநாயக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கெதிரான தனது கடும் நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது. இவ்வாறாக இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஈரான் - சோவியத் உறவில் புதிய திருப்பம்

(மாஸ்கோ)

ஈரானிய பாராளுமன்ற சபாநாயகர் ஹஸனி ரப்ஸன் ஜானியின் சோவியத் விஜயம் இரு நாடுகளிடையேயும் புதிய உறவுகளை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானில் கடந்த பத்துவருடங்களுக்கு முன் இடம்பெற்ற புரட்சியின் பின் சோவியத்திற்கு விஜயம் செய்த முதல் அரசு உயர்தலைவராக ரப்ஸன் ஜானி கருதப்படுகிறார். இவர் சோவியத் அதிபர் மிகையில் கொர்பச்சேவை இன்று சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இச் சந்திப்பின்போது பொருளாதார, இராணுவ, இராஜதந்திர தொடர்புகளிற்கான ஒப்பந்தமொன்றும் இரு தரப்பிடையேயும் கைச்சாத்திடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து வருடங்களில் இரு தரப்பு உறவிலும் குறிப்பிடத்தக்க எதுவும் நடைபெறவில்லையாயினும் கடந்த சில மாதங்களுக்குமுன் ஈரானிய ஆன்மீகத் தலைவர், எழுத்தாளர் சல்மான் ருஷ்திக்கு விதித்த மரணதண்டனை விவகாரத்தில் சோவியத், ஈரானிய தரப்பு கருத்துகளை ஆதரித்தும் இவ்விடயத்தில் ஈரானுக்கும் மேற்கத்திய நாடுகளுக்குமிடையில் சமசரம் பேச முன்வந்ததும் குறிப்பிடத்தக்கது.

சோவியத்தின் முக்கிய நட்பு நாடுகளான செக்கோஸ்லாவாக்கியா, ருமேனியா, பல்கேரியாவுடன் ஈரான் ஏற்கனவே இராணுவ உதவிகளை பெறும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டதும் தெரிந்ததே.

## பாலஸ்தீனப் பகுதியில் அரபு - யூதக் கலவரம்?

(ஜெருசலம்)

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் பலஸ்தீனிய பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களையடுத்து யூத—அரபு கலவரம் தோன்றும்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் பலஸ்தீனியர்களால் கொல்லப்பட்டதையடுத்து இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று அரபுகள் கொள்லப்பட்டும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.

இதையடுத்து இரு இனங்களிடையேயும் மேற்கு கரையோரப் பகுதியிலும் ஹாஸா நிலப் பகுதியிலும் பெரும் பதற்றநிலை உருவாகியுள்ளது, இரு சமூகங்களிடையேயும் எந்நேரமும் கலவரங்கள் தோற்றும் நிலையும் அங்கு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன,

இதற்கிடையில் அரபுக்களால் கொல்லப்பட்ட இஸ்ரேலிய அதிகாரியின் இறுதிக் கிரிகைகளில் இஸ்ரேலிய பிரதமர் திரு. ஷமிர் கலந்துகொண்டார். இதன்போது இஸ்ரேலியர்களை பாதுகாக்க இராணுவம் தவறிவிட்டதாகவும் அங்கு குழுமியிருந்த யூத மக்கள் பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-83 206 குடும்பங்களுக்கு நிவாரண உதவி

### 24-ம் திகதி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களினல் பாதிக்கப்பட்ட 206 குடும்பங்களுக்கு 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்–83' தொழில் வாய்ப்புக்கான சாதனங்களை நிவாரணமாக வழங்கவுள்ளது.

நிதியத் தலைவர் திரு. எஸ். சிவஞானம் தலைமையில் இம் மாதம் 24ந் திகதி காலை 9–30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் வைபவமொன்றில் வைத்து மேற்படி உதவிச் சாதனங்கள் வழங்கப்படும்.

65 பேருக்கு தையல் இயந்திரங்களும், 53 பேருக்கு மீன்பிடி உபகரணங்களும், 40 பேருக்கு கோழிப் பண்ணை அமைப்பதற்கான உதவியும், 40பேருக்கு சிறு கைத்தொழில் உதவியும், 6 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரமும், 2 பேருக்கு வண்டியும் மாடுகளும் வழங்கப்படும்.

## கிழக்கில் இலங்கைப் படைகள் வாபஸ் பெறப்பட்டது ஏன்?

### பாராளுமன்றத்தில் பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

''கிழக்கு மாகாணத்தில் சகல சமூகத்தினருக்கும் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதன் காரணமாக அப் பகுதிகளிலிருந்து இலங்கை பாதுகாப்பு படையினர் முற்றுக அகற்றப்பட்டனர்''.

இவ்வாறு பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நேற்று முன்தினம் பாபாராளுமன் கூடியபோது சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. ஜெயராஜ் பெர்ணண்டோபிள்ளையின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

''இந்திய–இலங்கை உடன்படிக்கையின் கீழ் 48 மணி நேரத்துள் மோதல்கள் நிறுத்தப்படவேண்டுமெனவும் 72 மணித்தியாலங்களுக்குள் சகல ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கையளிக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

''இந்திய அமைதிப்படையினர், இலங்கை பொலிஸ்படையின் ஒரு சிறிய குழுவின் சேவைகளை மாத்திரமே பெற்றுவந்தனர். தமிழ் நாட்டுக்கு சென்ற முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் தற்போது நாடு திரும்பிவிட்டன்ர். ஆனல் இந்திய கடவுச்சீட்டு வைத்துள்ள சுமார் எண்பத்துநாலாயிரம் பேரை இந்தியாவிற்குதிருப்பி அனுப்ப வேண்டியிருக்கிறது.

''ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கையளிக்கப்படாமல் இருந்ததன் காரணமாகவும், கட்டுப்பாடின்றி வன்முறைகள் தொடர்ந்ததன் காரணமாகவும் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அவசரகால நிலையை நீக்குவதற்கான சாத்தியம் இருக்கவில்லை. புதிய ஜனதிபதி பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுமுன் [illegible] இந்த [illegible] மாதம் 1ம் [illegible] அவசர கால நிலையை நீக்கினர்.

''இந்திய–இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினத்தில், தடுத்து வைக்கப்பட்டிருந்த 4,168 பேரில் 4,124 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 34 பேர்மீதான வழக்குகள் வாபஸ்பெறப்பட்டது. 21 பேருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.'' என்றும் அவர் தெரிவித்தார்.

## பனை அபிவிருத்தி நடவடிக்கை

(வண்ணார்பண்ணை)

மன்னர்ப் பகுதியில் பனை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்கும், அப்பகுதி உற்பத்தி தொடர்பான விரிவாக்கம்பற்றி ஆராய்வதற்குமென பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி, விரிவாக்கல் தொடர்பான உத்தியோகத்தர்கள் மன்னர் மாவட்டத்திற்குச் சென்றுள்ளனர்.

## அடுத்த நவம்பருக்கிடையில் சார்க் உறுப்பு நாடுகளுக்கு பெனஸிர் விஜயம்செய்வார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ சார்க் அமைப்பு நாடுகளுக்கு விரைவில் விஜயம்செய்யவுள்ளார். அடுத்த நவம்பர் மாதத்திற்கிடையில் இச் சுற்றுப்பயணம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளினதும் மாநாடு இவ்வருட பிற்பகுதியில் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் ஏழு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் விஜயம் இன்னமும் ஊர்ஜிதப்படுத்தம்படவில்லை.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வருவதற்கு முன்பும் ஓர் முறை பாக் பிரதமர் பெனஸிர் பூட்டோ இலங்கை வருவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் யகூப்கான் நேபாள வெளிவிவகார அமைச்சர் திரு. சைலேந்தகுமார் உபாத்தியாவுடன் நாளை வெள்ளிக்கிழமை பேச்சுக்கள் நடாத்தவுள்ளார். அடுத்த மாதம் 1ம் 2ம் திகதிகளில் இஸ்லாமாபாத்தில் நடைபெறவிருக்கும் 'சார்க்' அமைச்சர்கள் மட்ட மாநாட்டிற்கான ஆயத்தங்களை செய்யவே அவர் [illegible] மாண்டு செல்வதாக [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கிகளில் தமிழில் படிவங்கள்

### இரு மாதங்களில் அமுல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிகளில் பயன்படுத்தப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முக்கிய படிவங்கள் உட்பட அனைத்துக் கருமங்களுக்கான பத்திரங்களும் தமிழில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டிருந்த இந்தப் படிவங்களில் இனிமேல் தமிழும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது.

இரு மாதங்களுக்குள் தமிழிலான படிவங்கள், விண்ணப்பங்கள் யாவும் சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் புழக்கத்திற்கு விடப்படுமெனவும், மொழி பெயர்ப்பு சம்பந்தமான வேலைகள் யாவும் தம்மிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வடபிரதேச வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## இலேக்கஞ்சித் திட்டம்

(பூநகரி)

ஞானிமடம் சர்வோதய பாலர் பாடசாலையில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் இலேக்கஞ்சி திட்டம் ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;

— புறநானூறு.

## நமது நோக்கு

# மீண்டும் அந்தநிலை !

அவசரகாலநிலை மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட அரசாங்கம் எடுத்துள்ள உறுதியான முடிவு எனக் கூறப்படுகின்றது. இது எமக்குப் பரபரப்பான செய்தியல்ல.

முப்பது ஆண்டுகளுக்கு முன் அரசாங்கம் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்திய வேளைகளில் எல்லாம் ஏற்பட்டதென்ன? எங்கும் பரபரப்பு; இனம் காணமுடியாத ஏக்கம்; அடுத்தது என்ன என்ற அங்கலாய்ப்பு; செய்தித் தணிக்கையால் பரவிய வதந்திகள்; பொருள்களை வாங்கிவிடத் துடிப்பு; பொருள்களைப் பதுக்கிவிட வியாபாரிகள் அவசரம்; வேலிக்கு வேலி நின்று நடத்திய கருத்தரங்குகள், விமர்சனங்கள், அப்பப்பா! அது ஒரு தனி அனுபவம்!

1983 ஜூலை முதல் அவசர கால நிலை தொடர்ந்து அமுல் செய்யப்பட்டது. தாக்கம் இந்தப் பக்கம் தான். சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதும்; வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்ததும், இராணுவ நடவடிக்கைகளும் நீங்காத நினைவுகள்.

இன்று அவசரகால நிலையா? என்ன புதுமை இருக்கிறது? அறநனைந்தவனுக்குக் கூதலென்ன, குளிரென்ன?

ஜனாதிபதிதேர்தல் காலத்திற் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் அவசரகால நிலை நீக்கமும்ஒன்று. உரிய காலத்திற்கு முன்பே — அதாவது ஜனவரி 12-ல் — அவசரகாலம் நீக்கப்பட்டது. அது செய்திதான், அவசரகால விதிகளைப்பயன் பயன்படுத்தாமலே, நாட்டின் குழப்பங்களை, விசேடமாக ஜே. வி. பி. யின் எதிர்ப்புக்களைச் சமாளித்து விடலாம்என்றுதான் ஜனாதிபதி கணக்குப்போட்டிருப்பார்! ஆனால், நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்துவிடும்.

இன்று தெற்கின் நிலை என்ன? பஸ்வேலைநிறுத்தம்; அதனால் அலுவலகங்கள் ஸ்தம்பிதம். ரயில்சேவை பாதிப்பு பாடசாலைகள் இயங்கவில்லை. பல்வேறு காரணங்களால் பல்கலைக் கழகங்களும் நடைபெறவில்லை.

துறைமுகத்தில் தொழிலாளர் வேலை செய்ய மறுப்பு; எனவே இறக்குமதி இல்லை. பொருள்தட்டுப்பாடு எல்லோரையும்பாதிக்கின்றது. இந்த நிலையில் தான் அரசு அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யத் தீர்மானித்திருக்கிறது. ''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பாதுகாப்புப் படையினருக்கே ஆபத்து;இந்தச்சூழ்நிலையை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது!''- இது பாதுகாப்பு அமைச்சன் கூற்று!

தயக்கத்துடன்தான் இந்த முடிபு எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார். அவரின் கஷ்ட நிலை எமக்குப்புரிகிறது. ஆனால், இந்த அவசரகால நிலையைப் பயன்படுத்தி அப்பாவிமக்களைத் துன்புறுத்தக் கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

ஆத்திரத்தில், அவசரத்தில் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும்போது பழிக்குப்பழி என்ற உணர்ச்சி வேகம் மேலிடலாம. அப்பாவி மக்கள் இடையிலே அகப்படலாம். பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்வது நாட்டின் எதிர் காலத்திற்கு நல்லது. நீதி, நியாயம் என்பவை எல்லாம் ஒதுங்கிவிட இடமளிக்கப்படக் கூடாது.

# தீவுப்பகுதி போக்குவரத்து

## மக்கள் கருத்து

தீவுப்பகுதி மக்கள் தமது அன்றுட தேவைகளுக்கு யாழ் நகரையேநம்பியிருக்கிறார்கள். சுமார் இருபத்தையாயிரம் பயணிகள் தினமும் பண்ணையூடாக பயணம்செய்துவருவது அண்மைய கணிப்பீடுகளில் தெரியவந்துள்ளது. ஆனால் போக்குவரத்துச்சேவை இன்னமும் சீர்செய்யப்படாமலே இருந்துவருகிறது. குறிப்பாக ஊர்காவற்றுறைக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை போதிய அளவு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவில்லை. மக்கள் செறிவாக வாழும் 779 பாதையூடாக முன்னர் நடைபெற்றுவந்தசேவை இப்போது நடத்தப்படுவதில்லை. இந்தப் பாதையூடாக தனியார் போக்குவரத்துச்சங்கத்தினர் சேவையிலீடுபடுகின்றனர். தினமும் ஊர்காவற்றுறையிலிருந்து மாலையில் கடைசியாக 4-30 மணிக்குதனியார்பஸ்மட்டுமே சேவையிலீடுபடும். ஆனால் பயணிகள்குறைவானால்அச்சேவை நடைபெருது. தினமும் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு 779 பாதைவழியாக செல்லும்தனியார் சேவையினர் பெரும்பாலும் மிகச்சிறிய வான்களையே சேவையில் ஈடுபடுத்துகின்றனர். தினமும் தீவுப்பகுதி பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியைகளே இருபத்தைந்துக்கும் அதிகமானோர். இந்த ஆசிரியைகள்மட்டும் ஏறினலே பஸ் நிரம்பிவிடுகிறது. இதைவிட அன்றாடம்வேலைகளுக்குச் செல்லுவோர் வேறு. சில நிமிடங்களென்றால் கூனிக்குறுகியாவது நிற்கலாம். ஒரு மணித்தியாலபயணத்தைசமாளிக்கவேண்டியிருக்கிறது இந்த நேரங்களிலாவது பெரிய மினிபஸ்களை சேவையிலீடுபடுத்தலாமே. தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சங்கமும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையும் தீவுப்பகுதி போக்குவரத்துச் சேவையை சீர்செய்யவேண்டும்.

-கே. [illegible] நாரந்தனை.

# மேற்கத்திய நாகரிக அலையே சீன மாணவர் எழுச்சி

சீனுவில் நடப்பது என்ன? மீண்டும் இந்தக் கேள்வி எழுந்துள்ளது.

சீன மாணவர் ஜனநாயகப் போராட்டம் இராணுவச் சட்டப் பிரகடனத்தைத் தொடர்ந்து எடுத்த நடவடிக்கைகளினல் நசுக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளிலுள்ள பொது சனத் தொடர்பு சாதனங்கள் எல்லாம் தற்போதைய சீன நிலைகுறித்த செய்திகளையே இடைவிடாது பிரபல்யப்படுத்தி வருகின்றன.

''சீன உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு வருகிறது'' என்ற குற்றச்சாட்டை சீனத் தலைவர்கள் தற்போது எழுப்பியுள்ளனர்.

அமெரிக்க தலையீடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சோஷலிஸ நாடுகள் முதலாளித்துவ நாடுகள் என உலகம் இரண்டு முகங்களாகப் பிரிக்கப்பட்ட காலம் முதல் இந்தப் பிரச்னை இருந்துவருகிறது.

ஏற்பட்ட தருணத்தை நழுவ விடாது என்றஎண்ணத்துடன் அமெரிக்க ஜனதிபதி புஷ் உட்பட மேற்கத்திய தலைவர்கள் சீன மாணவர்களின் போராட்டத்தைப் பற்றிப் பிடித்துள்ளது உண்மைதான். ஆனால் அமெரிக்கா முதலிய மேற்குலக நாடுகளின் தலையீட்டினல் தான் இப்போது சீனுவில் மாணவர் பிரச்னை எழுந்துள்ளது என்று கூற முடியாது, கூறவும் இல்லை.

இதேவேளையில், சீனுவின் இன்றைய நெருக்கடி நிலை குறித்து மேற்கத்திய செய்தி ஸ்தாபனங்கள் வெளியிடும் செய்திகளையும் செய்தி விமர்சனங்களையும் அப்படியே ஏற்றுக்கொள்வதும் சரியல்ல. இந்த செய்தி நிறுவனங்கள் அந்தரங்க நோக்கங்களுடனேயே செய்திகளைத் திரித்தும் பெருக்கியும் எழுதுகின்றன என்பதைப் பலர் அடிக்கடி மறந்துவிடுகின்றனர். அண்மைக்கால சீன சம்பவங்களைப் பொறுத்தவரையில் இதுமுற்றிலும் பொருத்தமான உண்மையே.

சீனுவின் இன்றைய நெருக்கடி நிலையின் மறுபக்கத்தை நோக்கும்போது சீன வரலாற்றைச் சற்றுப் பின் நோக்கிச் சென்று பார்க்கவேண்டியுள்ளது. குறைந்தது அண்மைக் கால வரலாற்றையாவது நோக்குவோம்.

சீன மாணவர்கள் சடுதியாகக் கிளர்ச்சிக்காரர்களாக மாறியது எப்படி?

சீன மாணவர்களின் கோரிக்கை யாவை?

ஜனநாயகம் என்றும் சுதந்திரம் என்றும் கூறும்போது அவர்கள் எதைக் கேட்கிறார்கள்?

சீன மாணவர்கள் கிளர்ச்சியை புஷ் போன்ற மேற்கத்திய தலைவர்கள் ஆதரிக்க முன் வந்ததற்குக் காரணம் என்ன?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலைத் தேடும்போது மறைந்த சீனத் தலைவர் மாசேதுங், 'சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரப் பிரச்னை' என்ற நூலுக்கு எழுதிய விமர்சனக் குறிப்புகளில் ஒன்று நினைவுக்கு வருகிறது.

''இன்று எமது முக்கிய பிரச்னைகளில் ஒன்று எமது ஊழியர்களின் பிள்ளைகளாகும் —

''இவர்கள் வாழ்க்கையின் நெருக்கடிகளையோ புரட்சியின் பிரச்னைகளையோ அறியாதவர்களாக சொகுசாக வளர்கின்றனர்—

''இவர்களுக்குப் புரட்சியைப் போதிப்பது கடினமான ஆனல் கட்டாயமாகச் செய்யவேண்டிய பணியாகும்.''

அறுபதுகளின் ஆரம்பத்தில் அன்றைய தலைவர் மாசேதுங் [illegible] கொண்டிருக்கிறது.

இங்கே ஊழியர்கள் என மாசேதுங் குறிப்பிட்டது அதிகாரிகளாக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையே ஆகும்.

சீனப் பெரும் புரட்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த இத்தலைவர்களில் பலர் கால ஓட்டத்தில் மென்மைப் போக்கைக் கடைப்பிடித்துச் சுயநலக்காரர்களாக மாறியபோது அவர்களது பிள்ளைகள், பெற்றோருக்குக் கிடைத்த வசதிகளையும் சலுகைகளையும் மட்டுமே அனுபவித்தார்கள் - மேலும் கூடுதல் சலுகைகளை நாடி நின்றனர்.

மாணவர் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களில் ஒரு தொகையினர் மேற் சொல்லப்பட்ட இளம் வர்க்கத்தினரே ஆவர்.

- சஞ்சாரன் -

மாசேதுங்கின் மரணத்திற்குப் பின் பதவிக்கு வந்த தெங்சியாவோ பெங், முதலும் முக்கியமுமான பணி மாசேதுங்கின் கொள்கைகளை மறக்கச் செய்து திறந்த கதவுக் கொள்கையைச் சீனுவில் அமுல்படுத்தியதே ஆகும்.

இத்திறந்த கதவுக் கொள்கையினல் பல்லாயிரக்கணக்கான சீன இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய முதலாளித்துவ நாடுகளுக்குப் படிக்கவும் வேலைசெய்யவும் சீனத் தூதுக் குழுக்களில் அங்கத்தவர்களாகவும் செல்லத் தொடங்கினர்.

அதேவேளையில், மேற்கு நாட்டவர்கள் முன்னரிலும் அதிகமாகச் சீனுவுக்குள் சென்றனர்.

வெளிநாடுகளுக்கு குறிப்பாக மேற்குலக நாடுகளுக்குச் சென்ற சீன இளைஞன் அந்த நாடுகளின் வசதிகள், வாய்ப்புக்கள் அனைத்தையும் அனுபவிக்கிறன். அவற்றின் பால் ஈர்க்கப்பட்ட அவனுக்கு அந்த வசதி வாய்ப்புக்கள் ஒரு நவீன உலக தரிசனமாகவே தென்படுகிறது.

மாடமாளிகைகள் கூடகோபுரங்கள், ஆடம்பர வாகன வசதிகள், தொலைக்காட்சி, இரவு கேளிக்கை விடுதிகள் போன்றுவற்றால் அவன் ஆங்கொள்ளப்படுகிறான் நவீன வெளிநாட்டு மோகவலையில் அவன் சிக்கிக் கொள்கிறன்.

இவற்றை ஜெல்லாம் அனுபவிப்பதற்கு ஜனநாயகம் தான் வேண்டும் எனறு எண்ணத் தலைப்படுகிறன்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய பின்னர் சீனு கோடிக்கணக்கில் ஜனத்தொகையைக் கொண்டநாடு என்றே சீனமக்களின் பின் தங்கிய வாழ்க்கையையோ அவன் சிந்திக்கத் தயாராக இல்லை.

குறிக்கோள் எதுவும் அற்ற சீன இளைஞனின் உள்ளத்திலிருந்த வெற்றிடத்தை வெளிநாட்டு ஆடம்பர மோகம் நிரப்பிவிட்டது.

### சுதந்திரஅலை

சோவியத் யூனியனிலும் போலந்திலும் ஏற்பட்ட சுதந்திரஅலை சீனுவிலும் வீசத் தொடங்கியது.

இன்றைய சீனத் தலைவர்களே தாம் கடைப்பிடித்து வந்த மாசேதுங் எதிர்ப்புக் கொள்கையை தீவிரமடையச் செய்ய இந்த இளைஞர்களின் மோகத்தைப் பயன்படுத்தினர்கள்.

''பூனை கறுப்போ, வெள்ளையோ எலி பிடித்தால் போதும்'' என்ற மனப்போக்கைக் கொண்ட தெங்சியாவோ பெங்கின் கொள்கையே இன்று இந்த மாணவர் ஜனநாயகப் போராட்டத்துக்கு வழி சமைத்தது என்றே கூறலாம்.

அதாவது சீனத் தலைவர்களினலேயே வளர்த்துவிட்ட பெரும் பூதமே இன்று அவர்களை விழுங்கப்பார்க்கிறது.

இளைஞர்கள் மட்டுமல்ல, வேறுசிலபகுதியினரும் மாணவர் ஜனநாயக போராட்டத்துக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். இவர்களில் உயர்மட்ட புத்திஜீவிகளும் கணிசமான தொகையினர் எனக் கருதக்கூடிய தகவல்கள் வெளிவந்துள்ளன. விஞ்ஞானிகளும் டாக்டர்களும் இவர்களில் அடங்குவர்.

தெங்சியாவோ பெங்கின் ஆட்சியில் தமக்குப் போதிய பொருளாதார நன்மைகள் கிட்டவில்லை என்று எண்ணியவர்களே இந்த மாணவர் ஆதரவு புத்திஜீவிகள்.

பீக்கிங் மாணவர் போராட்டத்துக்கு தொழிலாளர்களும் ஆதரவு தெரிவித்துள்ளார்கள் என்ற செய்தி பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம் ஆனல் சீனுவைப் பொறுத்தவரை தொழிலாளர்கள் தொழில் துறை சார்ந்த தொழிலாளர்கள் ஒரு உயர்ந்த சலுகை பெற்ற வர்க்கத்தினர் ஆவர்.

சீனமக்கள் தொகையில் பெரும்பான்மையினரான விவசாயிகளுடன் ஒப்பிடும்போது சீனத்தொழிலாளர்கள்சலுகை பெற்ற வர்க்கம் என்பது மாசேதுங்கின் கருத்துமாகும்.

ஆகவே இத்தகைய தொழிலாளர்கள்,மாணவர்போராட்டத்துடன் சேர்ந்துகொண்டது ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

### போராட்டத்தின் உச்சக் கட்டம்

இந்தப் போராட்டத்தில், விஞ்ஞானி பாங் லீ ஷீயும் அவ

(5-ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### அவர்கள் போகமாட்டார்கள்

பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டு விழா அடுத்த ஜூலை மாதம் நடைபெறவிருக்கிறது, வெகுகோலாகலமாக.

பிரித்தானியா, பெல்ஜியம், நெதர்லாந்து, ஸ்பெயின், சுவீடன்,நோர்வே, டென்மார்க், லக்சம்பேர்க், மொனேக்கோ போன்ற ஐரோப்பிய நாடுகளின் அரசுத்தலைவர்கள் இதிற் பங்குபற்றமாட்டார்கள். காரணமென்ன?

இந்த நாடுகளின் அரசுத் தலைவர்கள் அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அதாவது அந்த நாடுகளில் இன்னும் பெயரளவில் மன்னராட்சி தொடர்கிறது.

மக்களாட்சியை மலரச்செய்வதற்காக, பதினலாவது லூயி மன்னனுக்கு எதிராக நடைபெற்றதுதான் பிரெஞ்சுப்புரட்சி. மன்னராட்சிமுறையையே மறையச்செய்தபுரட்சி நினைவு விழாவுக்கு மன்னர்கள் எவ்வாறு செல்லலாம்? ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலுள்ள மன்னர்கள்கூடச் செல்லமாட்டார்களாம்!

1793ல் புரட்சியின் உச்சக்கட்ட நிகழ்ச்சி எது? லூயி மன்னன் மக்களால் கொலை செய்யப்பட்டதுதான். அவரின் இனத்தவர்கள்தானும், ஐரோப்பாவில் இன்றும் மன்னராட்சிக் குடும்பங்களைச் சேர்ந்த பலர்! நல்ல சிக்கல்: அவர்கள் போகமுடியாது தான்!

--வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வருடாந்த உற்சவம்

(அராலி)

அராலி வடக்கு அருள்மிகு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தீர்த்தோர்சவம் இன்று நடைபெறவுள்ளது.

## மேற்கத்திய

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருடைய மனைவியும் பீக்கிங்கில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தினுள் சென்று தஞ்சம் புகுந்துள்ளது உச்சக்கட்டமே.

சீன மக்கள் இத்தகைய விஷயத்தை என்றுமே மன்னிக்கமாட்டார்கள் என்பது சீன மக்களின் உளவியலை நன்கு அறிந்திருந்தவர்களின் கருத்து.

நீண்ட காலச் சீன வரலாற்றில் உள்நாட்டில் ஏற்பட்ட போராட்டங்கள் காரணமாக வெளிநாடு சென்றவர்கள் மிகக் குறைவு.

சீனப் புரட்சிக் காலத்தில் ரஷ்யாவுக்குச் சென்று தஞ்சம் புகுந்த வாங் மிங் லீ லிஷாங் போன்றவர்களைச் சீன மக்கள் துரோகிகளாகவே கருதினார்கள்.

சீனாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் மாணவர் போராட்ட ஆதரவாளர்களான விஞ்ஞானிகளும், தொழிலாளிகளும், வெளிநாட்டுத் தூதரகங்களில் பணிபுரியும் அதிகாரிகளும் வேற்று நாட்டவரிடம் சரணடைவதால் மாணவர் இயக்கம் மட்டுமல்ல, சீனாவின் இன்றைய அரசுக்கு எதிரானபரவலலான புரட்சி இயக்கமே பலவீனம் அடைந்துவிட்டது. இதனால் தான் இன்றைய சீன ஆட்சியாளரால் இந்த விஷயத்தில் ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்க முடிந்தது.

சீன மாணவர் ஜனநாயகப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதில் அமெரிக்காவே போட்டி போட்டுக்கொண்டு முன்னணி வகிக்கின்றது.

அமெரிக்காவிலேயே சீன மாணவரின் போராட்டத்திற்கு ஆதரவாக பரவலான ஆர்ப்பாட்டங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கான சகல இராணுவ பொருளாதார ஏற்றுமதிகளையும் அமெரிக்கா நிறுத்திவிட்டது.

இதைவிட பீக்கிங்கிலுள்ள தமது தூதுவரை கனடா திருப்பி அழைத்துள்ளது,

மாணவர்களுக்கு எதிரான சீன இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையில் சீனாவிலிருந்து தமது தூதுவரைத் திருப்பி அழைத்த முதல் நாடான கனடா அங்குள்ள சீன சமூகத்தினரின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம், பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா போன்றவையும் மாணவர்களுக்கு ஆதரவான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளையில் "சீன விவகாரத்தில் அமெரிக்கா மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்" என அமெரிக்காவின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் டாக்டர் ஹென்றி கிஸிங்கர் அமெரிக்க நிர்வாகத்துக்கு புத்திமதி கூறியுள்ளார்.

### மோசமான எதிர்விளைவுகள்

இந்நிலையில் சீன மாணவர் போராட்டத்திற்கு உதவி செய்வதென்ற பெயரில் மேற்கத்திய நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எல்லாம் மோசமான எதிர்விளைவைத் தான் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேம் இல்லை.

# "நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பிரிவை தனி ஒரு கல்லூரியாக்க வேண்டும்"

### உப அதிபர் கூறுகிறார்

(வடமராட்சி)

கரவெட்டிப் பிரிவில் மகளிருக்கென ஒரு பாடசாலை இல்லை. இதன் காரணமாக ஆயிரக் கணக்கான மாணவிகள் பல மைல் தூரம் கஷ்டத்தின் மத்தியில் வாகனங்களிலும் சைக்கிள்களிலும் சென்று கல்வி கற்கவேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது இருபிரிவுகளாக இயங்கி வரும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மகளிர் பிரிவை மகளிர் பாடசாலையாக மாற்றுவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண முடியும்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கல்லூரி மகளிர் பிரிவின் தற்போதைய உப அதிபர் திருமதி சரோஜினிசுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு.ஞேய் காந்தராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் "தற்போது இரு பிரிவுகளினதும் நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கும்நிதிகளில்கூட இப்பணிகளை இருபிரிவுகளாக நடைமுறைப் படுத்துவதால்மகளிர் பிரிவுக்கு நிதிப் பற்றுக்குறை ஏற்படுகிறது. இவை வெவ்வேறு பாடசாலைகளாக இயங்குவதன்மூலம் இரு பாடசாலைகளும் முன்னேறுவதுடன் மாணவியரின் நலனும் பேணப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும்" என்று கூறினார்.

## கல்விப் பணிப்பாளர் பாராட்டு

(சுன்னாகம்)

யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு விஜயம்செய்தபோது மருதனமடம் கோட்டக் கல்வி அலுவகப் பொறுப்பதிகாரி திரு.ஆர். கே. குலசேகரன் சகிதம் கல்லூரி வளவைச் சுற்றிப் பார்வையிட்டார்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களால் இக்கல்லூரியில் மேற் கொள்ளப்பட்ட சிரமதானப் பணியையும் பாராட்டியுள்ளதோடு, கல்லூரியின் சிரேஷ்ட மாணவிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரும் குறைவானதாகக் கருதாது இவ்வாறான சிரமதானப் பணியில் ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

## துணுக்காயில் கடும் வரட்சி

(அச்சுவேலி)

துணுக்காய்ப் பகுதியில் கடும் வரட்சி நிலவுகின்றது. மக்கள் குடிநீர் தேடி அலையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலம் மழை பெய்யாமை வவுனிக்குள நீர்ப்பாசன வாய்க்கால்களில் நீர் இல்லாமை ஆகிய நிலைமைகளினால் துணுக்காய்ப் பகுதியில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது.

மக்கள் குடியிருக்கும் வளவுகளில் உள்ள கிணறுகள் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. குடிநீர் தேடி மக்கள் நீண்ட தூரத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## நவாலி வடக்கில் பரிசோதனை நிலையம்

(சுண்டுக்குளி)

நவாலி வடக்கு தாய் சேய் பரிசோதனை நிலையத் திறப்பு விழா நவாலி ஆரம்ப சுகாதார தலைவர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. எஸ். குணரத்தினம், நவாலி குடும்ப நலச் சேவையாளர் திரு. எஸ். கனகராசா, மாணவர் குடும்ப நலச்சேவையாளர் செல்வி ஜெயமலர் அப்புத்துரை, குடும்பநல சேவை மேற்பார்வையாளர் திருமதி இந்திரா நாயகி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## வழிபாடு

(மன்னார்)

மன்னார் இ. போ. ச. சாலையில் புதிதாகப் புனித அந்தோனியார் திருச் சுரூபம் நிறுவப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாடுகளை மன்னார் ஆசனக் கோவில் கட்டளைக் குரவர் அருட்திரு ஏ. பி. தேவசகாயம் நடத்தினார்.

சாலை ஊழியர்கள் அனைவரும் சாதி மத வேறுபாடுகளின்றிக் கலந்துகொண்டனர். மன்னார் பொது நிலையினர் சார்பில் இளைப்பாறிய பாடசாலை அதிபர் ஜி. ஈ. மிராண்டா சிறப்புரை வழங்கினார். சகல ஏற்பாடுகளையும் சாலை பிரதம அதிகாரி எஸ். இராஜரட்ணம் செய்துவைத்தார்.

## பஸ்சேவை நடத்த கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பனிப்புலம் ஊடாகச் சுழிபுரம் கிழக்கு கண்ணகை அம்மன் கோவிலடிவரை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பனிப்புலம் அம்பாள் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## "உதைபந்தாட்டம்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் சங்கம் "உதை பந்தாட்டம்" என்னும் நூலை இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடவிருக்கிறது.

பிரபல உதைபந்தாட்டப் பயிற்சியாளர், திரு. டேவிட் தம்பிராஜா தமிழில் எழுதிய இந்நூல் வெளியீட்டு விழா யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா ஜி. ஏ. பிரான்சிஸ் ஜோசப் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். (வி)

## விசேட பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க பதிவுபெற்ற வைத்தியர்கள் மற்றும் உதவி வைத்தியர்கள் தொழிற் சங்கத்தின் வடபிரதேசக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் அடுத்தமாதம் 2-ம்திகதி யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

மேலதிக வேலைக்கான வேதனம், இடமாற்றத் திட்டம், பதவி உயர்வு போன்ற முக்கிய விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது.

## இலங்கை வான் பிரதேசத்துள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த விமானங்கள் இப்பிரதேசத்தில் சுமார் அறுபது மைல் தூரத்தில் பறந்து செல்வதை ரடார் கருவி பதிவு செய்துள்ளதுடன் பல சந்தர்ப்பங்களில் இலங்கை விமானிகளும் நேரில் அவதானித்துள்ளனர். எனினும் ஊடுருவல் விமானங்கள் போர் விமானங்களை போன்று வர்ணங்கள் பூசப்பட்டுள்ளதால் அவற்றை அடையாளம் காண முடியாமல் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

"இவ்வாறு கூடுதலாக 'ஜெற்' விமானங்களே ஊடுருவியுள்ளன. அதிக உயரத்தில் அதிவேகமாக இப்பிரதேசத்தை ஊடுருவிச் செல்லும் அனேகமாக இலங்கையின் வட - மேற்கு பகுதியிலிருந்தும் மேற்குப்பகுதியிலிருந்தும் குறிப்பாக மொறட்டுவ, நீர் கொழும்பு கரையோரப் பிரதேசங்களில் இவற்றின் ஊடுருவல் அவதானிக்கப்பட்டுள்ளது.

"காலநிலை சாதகமாயிருக்கும் காலங்களில் இவ்வாறு முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் அடி உயரத்தில் இவை அவதானிக்கப்பட்டுள்ளன. நவீன விமானங்களிலிருந்து சுமார் அறுபதாயிரம் அடி உயரத்திலிருந்து நிலப்பகுதியை தெளிவாக படம் எடுக்கலாம்.

"கடந்த சில வருடங்களில் இவ்வாறு இலங்கை வான் பிரதேசத்துள் 50 முறை ஊடுருவல் நடைபெற்றுள்ளது. பொதுவாக ஒரு மாதத்திற்கு ஒரு முறையும் சில நேரங்களில் இருமுறையும் சென்றுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பல தடவைகள் இலங்கை விமானிகள் அவதானித்துள்ளனர்.

இலங்கையில் அதி நவீன விமானங்கள் இல்லை இருக்கும் பட்சத்தில் ஊடுருவல்கள் அவதானிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நாடுகளிடம் மீண்டும் அவ்வாறு ஊடுருவல் ஏற்படாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

"எமது நாட்டைப்பொறுத்தவரை சுமார் 60 விமானிகளே உள்ளனர். சிறந்த சேவையாற்ற மேலும் 60 விமானிகள் தேவைப்படுகிறார்கள். விமானப் படையின் ஹெலிகொப்டர் பிரிவு 29 ஹெலிகொப்டர்களைக் கொண்டுள்ளது. அதில் 14 பெல் - 212 ரகத்தைசேர்ந்தது. 1984ற்கு பின் நான்கு ஹெலிகொப்டர்கள் இழக்கப்பட்டுள்ளன.

"தற்போது பன்னிரெண்டு விமானத் தளங்களை இலங்கை விமானப் படையினர் பராமரித்து வருகின்றனர். விமானப் படையினரின் பயிற்சித் தளங்களாக கட்டுநாயக்கா, இரத்மலானை, சீனன்குடா, அநுராதபுரம் தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது அநுராதபுரம் விமானப்படை விமானத் தளம் நவீன முறையில் விஸ்தரிக்கப்பட்டு சகல வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"கடந்தகால இராணுவ நடவடிக்கைகளுக்காக 2ம் இலக்க போக்குவரத்து விமானப்பிரிவு கட்டுநாயக்காவிலிருந்து இரடமலானவுக்கு மாற்றப்பட்டது. வட-கிழக்கு இராணுவ நடவடிக்கையில் பத்து விமானிகள் ஒன்பது விமானங்களுடன் ஈடுபட்டனர். (இவை ஒருவகை போர் விமானங்களே) அந்த ஒன்பது விமானங்களில் ஒரு எச். எஸ். 748 அவ்ரோ, இரண்டு 'ரிலேஸ்' விமானங்கள் ஒரு 'கெரோன்' மூன்று 'டோவ்ஸ்' இரண்டு பழைய எயர்கிலோன் டி.சி 3 எஸ். மேலும்இரண்டு அவ்ரோ இரு பெரிய வை-8ம் ஆறு சிறிய வை-12ம் பயன்படுத்தப்பட்டுள்ளன. டி. சி. 3 எஸ் பழுதடைந்து கைவிடப்பட்டது.

தற்போது ஒன்பது, சியாய் மார்செட்டி' (பொமர்) விமானங்கள் விமானப்படை தாக்குதல் பிரிவில் உள்ளது. இவை ஒரு நடுத்தர தாக்குதல் விமானங்களாகும். நவீன ரகபோர் விமானங்கள் அதிக விலையுடையன. சாதாரணமாக விமானங்கள், ஹெலிகொப்டர்களில் இருந்து ஏவப்படும் ராக்கெட்டுகளே இலங்கை ரூபாவில் 20,000 ரூபாயாகும்.

இந்தவகையில் ஆறு ராக்கெட்டுகளை சியால்மார்செட்டி (பொமர்) வைத்திருந்து ஏவக்கூடியது, பெரிய போர் விமானங்கள் 12 ராக்கேட்டுகளை செலுத்தக்கூடியன. இது சாதாரண செயற்பாடேயாகும். விமானப்படை விமானிகளும் இவ்வாறானவற்றையே இங்கு விரும்புகிறார்கள். புதிய நவீன ரக விமானங்களை வேண்டும் உத்தேசமும் எதிர்காலத்தில் இலங்கைக்கு உண்டு.

## புலமைப் பரிசில் திட்டம்

(கொழும்பு)

பயங்கரவாத வன்செயல்களால் பாதிக்கப்பட்ட ஆயுதப் படையினரின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்மை முருகமூர்த்தி முருகமுர்த்தி கோவிலில் இன்று வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 25ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறும்.

## அலுவலர்கள் விடுதி

(மன்னார்)

மன்னார் கல்வித் திணைக்களத்தின் உயர் அலுவலர்களுக்கான விடுதிக் கட்டிடத்தின் அடிக்கல் நாட்டு விழா மன்னார் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது. உயர் அலுவலர்கள் மத்தியில் மன்னார் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. அ. சுந்தரலிங்கம் முதல் கல்லை நாட்டி வைத்தார்.

## அலங்காரஉற்சவம்

(புலோலி)

புலோலி மத்தி முருகையன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம், இம்மாதம் 26ம் திகதி திங்கட்கிழமையுடன் முடிவடையும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டவர்கள்
# மக்கள் வங்கிக் கடனுதவிக்கு
## இதுவரை விண்ணப்பிக்கவில்லை!"
### வ. பி. முகாமையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
கடந்தகாலங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது சேதமடைந்த வர்த்தக நிறுவனங்கள், வீடுகள் போன்றவற்றை புனரமைப்புச் செய்வதற்கு மக்கள் வங்கியால் வழங்கப்படவிருந்த கடனுதவிக்கு இதுவரையும் ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை என்று வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனைப் பெறுவதற்காக முன்னூறு பேர், மக்கள் வங்கியிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுச் சென்றுள்ளபோதிலும் அவை பூர்த்தியாக்கப்பட்டு திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கடன் உதவித் திட்டத்தில் வீடுகள் பாதிப்படைந்தவர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும், வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாவும் மக்கள் வங்கியினுல் கடனுக வழங்கப்படும் என்று தெரிவித்த முகாமையாளர் தொழில் இழந்தவர்கள் உட்பட ஏனைய கடன் திட்டங்களும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் சொன்னுர்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)
யாழ். செஞ்சிலுவைச்சங்கம் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து நடமாடும் சுகாதார சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான வாகனமும் மருந்துப் பொருட்களும் மேற்படிச் சங்கத்திற்கு இந்த வாரம் வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புனர்வாழ்வுப் பணிக்கு மே மாதம் 13லட்சம் செலவு
### கழகம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]
அகதிகள் புனர்வாழ்வு கழகம் கடந்த மாதம் புனர்வாழ்வுப் பணிகளுக்காக பன்னிரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரம் ரூபாவை கொடுத்துதவியதாக நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் அபிவிருத்தி, வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம், வைத்திய உதவிகள், புனரமைப்புப் பணிகள் ஆகியவற்றிற்காகவே இப்பணம் செலவுசெய்யப்பட்டதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## விஞ்ஞான ஆலோசகர்கள்

[பருத்தித்துறை]
பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியர்களாகப் பணியாற்றும் திரு. இர. சந்திரசேகரசர்மாவும், திரு. எஸ். கைலாசபதியும் யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்தால் வலய விஞ்ஞான சேவைக்கால ஆலோசகர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## இந்திய விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய பதவி
### அமைச்சர் ஹமீட் உறுதி

[யாழ்ப்பாணம்]
"இந்தியாவில் பட்டம் பெற்ற விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதிபெறவேண்டியது அவசியம். இதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வேன்"

உயர்கல்வி, விஞ்ஞானத்துறை அமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ், ஹமீட் தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த வடமாகாண வேலையற்ற பட்டதாரி ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவினரிடமே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

1985ம் ஆண்டுக்கு முன் பட்டம்பெற்று வேலையற்றிருக்கும் சகல பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்ததாகவும் மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. ஏ. சிவராசா தெரிவித்தார்.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தேவைகளுக்கு தமது சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் திரு. சிவராசா தெரிவித்தார்.

(பண். நிரு)

## பாதைசீர்கேடு

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை, மருதங்கேணி- ஆழியவளை பாதை மிகவும் பழுதடைந்துள்ளதால் இப்பாதையில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ்கள் தமது சேவையைத் தொடரமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறையில் இருந்து பதினுறு மைல் நீளமுள்ள மேற்படி பாதை கடந்த பல வருடங்களாகச் சீரமைக்கப்படவில்லை.

## 'ஈழநாடு' அனுசரணையுடன் நடந்த
# குழந்தைப் பாடல் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
'ஈழநாடு' அனுசரணையுடன் யாழ் இலக்கிய வட்டம் நடாத்திய மதுரகவி இ. நாகராஜன் நினைவுக் குழந்தைப்பாடல் தொகுப்பு போட்டியில் பரிசில் பெற்றோர்க்கான பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் இம்மாதம் 25ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவிருக்கும் விழாவில் பரிசளிப்பு உரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

மதுரகவி இ. நாகராஜன் நினைவுப்பேருரையையும் மதுர கவிதைகள் நூல் வெளியீட்டுரையையும் திரு. க. சொக்கன் நிகழ்த்துவார்.

மயிலங்கூடலூர் பி. நடராஜன், கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

பா. சத்தியசீலன், பதிலுரையும் திரு. ஐயா சச்சிதானந்தன் வரவேற்புரையும் நிகழ்த்துவார்கள். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நன்றி கூறுவார்.

இந்நிகழ்ச்சியில் பா. சத்தியசீலன், வ. இராசையா, ம. விக்ரர் (ஜெயம்) ரி. எம் செல்வத்தம்பி (வளவை வளவன்) த. துரைசிங்கம் ஆகியோர் பரிசு பெறுவார்கள்.

திருவாளர்கள் மு. இராமச்சந்திரன், வே. முத்துக்குமாரு, மட்டுவில் ஆ. நடராசா, வை. சுந்தரேசன், திருமதிகள கோகிலா மகேந்திரன், சிவயோகமலர் ஜெயக்குமார், செல்வி ஜெகத்தவி தர்மலிங்கம் ஆகியோர் பாராட்டு பெறுவார்கள்.

## நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். கல்வித்திணைக்கள விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எஸ். நடராசா யாழ். பிரரதேச கல்வித்திணைக்களத்தில் பாடசாலை மேற்பார்வைக் கல்வியதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியரியராகவும் மாத்தளைப்பகுதி விஞ்ஞானக் கல்வி அதிகாரியாகவும நீண்டகாலம் கடமையாற்றிய திரு. நடராசா 1983 ம் ஆண்டு யாழ். மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரியாக இடமாற்றம் பெற்றுர் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

[பருத்தித்துறை]
பருத்தித்துறைதட்டாதெரு மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பதில் அதிபராகஅப்பாடசாலையின்ஆங்கில ஆசிரியை திருமது பீ. செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். இப்பாடசாலையின் அதிபராகப்பணியாற்றிய திரு. மு. தணிகாசலம் ஓய்வு பெற்றுள்ளார்.

0 0

[மன்னுர்]
மன்னுர் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சிரேஷ்ட கூட்டுறவு பரிசோதகர் திரு. எஸ். பாலசிங்கம் நியமனம் பெற்றுள்ளார். இதே வேளையில் புதிய மன்னுர் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளராக, சிரேஷ்ட ஆய்வு அலுவலர் திரு. பி.கே. பதுநாத்து நியமனம் பெற்றுள்ளார். முன்னர் இரு பதவிகளையும் வகித்தவர்கள் திருகோணமலையிலுள்ள வடக்கு- கிழக்கு மாகாண சபை அலுவலகத்திற்கு மாற்றலாகி சென்றுள்ளனர்.

## விளையாட்டுத் துறையில் முன்னேற்றம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டம் இன்று விளையாட்டுத் துறையில் முன்னேறி வருகிறது. அருணோதயா விளையாட்டுக் கழகம் விளையாட்டுத் துறைக்கு ஆற்றிவரும் சேவையும் இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு கிளிநொச்சி அருணோதயா விளையாட்டுக் கழகப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட உடற் கல்வி அதிகாரி திருமதி சூரிய மூர்த்தி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி கலை அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழகத்தின் புதியதலைவராக திரு. என். சிற்றம்பலம் தெரிவு செய்யப்பட்டார்.

## திருப்பணிச் சபை

(வல்வெட்டித்துறை)
வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருப்பணிச் சபை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; திரு. வ. இ. நடனசிகாமணி, செயலாளர்: சி. மோ. சிவமயம், பொருளாளர்: திரு. மு. கந்தசாமித்துரை. சபை உறுப்பினர்களாக 12 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இராசி பலன்

22-06-1989

திரிதியை பகல் 10 – 26 வரை, திருவோணம் பி.இரவு 4-32 வரை, சித்தயோகம், இராகுகாலம் 1 - 24 முதல் 2–58 வரை, சுபகருமங்கள் செய்யலாம்.

மேஷம்:- புதிய சிந்தனைகள் மகிழும், தொழில் மூலமானலாபம், நீண்ட நாள் பிரிவு அகலும், குடும்ப மழ்கிச்சி.

இடபம்: பயணங்களால் நன்மை, தொழில் செய்யுமிடத்தில் பாராட்டு, காதல் உறவு, நல்லோர் சந்திப்பு.

மிதுனம்: ஏமாற்றம், குடும்பத்தில் சச்சரவு, தனித்திருத்தல், பணக்கஷ்டம் குழப்பமடைதல்.

கடகம்: நல்லசெய்தி, தர்க்கம், புதிய தொழில், குடும்பச் சிறப்பு, மக்களால் நன்மை.

சிங்கம்: நோய்தணியும், சுபகாரியம், குடும்பஒற்றுமை இனசனக்கொண்டாட்டம்.

கன்னி; அதிகாரிகள் சினம், வழிதவறுதல், போட்டிமனப்பான்மை, கடும்சினம், கவலை.

துலாம்: அடிமைநிலை, அஞ்ஞாதவாசம், தொழில் நஷ்டம், மனைவியுடன் சண்டை, மனச்சுமை.

விருச்சிகம்: குடும்ப உல்லாசம், பிறருக்கு உதவுதல், நண்பருதவி, காதல் சிறப்பு, கல்வி மேன்மை.

தனுசு: பழையசிந்தனைகள், பெண்வழிதொல்லை, குடும்ப விவகாரம், பணச்செலவு, சோம்பல்.

மகரம்: புதியநிலை, கடன் வசூலாகும், மனையில் கொண்டாட்டம், புகழ் தொழில் சிறப்பு.

கும்பம்:மனதில் வன்மம், சந்தர்ப்பம் நழுவிப்போகும், பணம்மூலமான கவலை, கைப்பொருள்நஷ்டம்.

மீனம்: விவாக முயற்சி, கடிதஉறவு, பணவரவு, குடும்ப சுகம், விருந்துபசாரம்.

## வீடமைப்பு அதிகாரசபை போட்டி:
# வரணி வாசிக்கு ஜனதிபதி பரிசு!

(யாழ்ப்பாணம்)
வீடமைப்பு அதிகார சபையினுல் நடத்தப்படும் குறைந்த செலவில் உள்ளூர் மூல வளங்களைக் கொண்டு வீடு கட்டும் போட்டியில் வரணியைச் சேர்ந்த மாணிக்கம் நாகராசா தேசிய ரீதியில் மூன்ருவது இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு பதினையாயிரம் ரூபா ரொக்கப் பணமும், சான்றிதழும் ஜனதிபதியினுல் வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் 23-ம் திகதி மகியங்கனையில் நடைபெறும் கம் உதாவ கொண்டாட்ட திறப்பு விழாவில் வைத்து இப்பரிசு வழங்கப்படும்.

கிராமோதய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட இவர் 18,500 ரூபாவை பரிசாகப் பெற்றுள்ளார். ஏற்கனவே பெற்றுள்ள மூன்று பரிசுத் தொகையுடன் தேசிய மட்டத்தில் பெற்ற தொகையையும் சேர்ந்து 33,500 ரூபாவை இவர் ரொக்கப் பணமாகப் பெறுகிருர்.

யாழ். மாவட்டத்தில் முதன் முதலாகப் பரிசு பெறும் இவர் கட்டிய வீட்டுக்கான செலவுத் தொகை 7,500 ரூபாவாகும் என்று வீடமைப்பு அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விவசாய அறிவுப் போட்டி

(பூநகரி)
சென். அன்ரனிஸ் இளைஞர் விவசாயக் கழக மண்டப மைதானத்தில் விவசாயப் போதனுசிரியர் திரு.சி.மல்லிகாந்தன் தலைமையில் குமுழமுனை சென். அன்ரனிஸ் விவசாயக்கழகத்திற்கும், கரியாலை நாகபடுவான் பல்லவன் இளைஞர் விவசாயக் கழகத்திற்கும் இடையில் விவசாய அறிவுப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் கரியாலை நாகபடுவான் பல்லவன் இளைஞர் விவசாயக் கழகம் 57 புள்ளிகளைப் பெற்று 1ம் இடத்தையும், குமுழமுனை சென் அன்ரனிஸ் இ. வி. கழகம் 46 புள்ளிகளைப் பெற்று 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)
பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 27, 28, 30ந் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## மதிய உணவு: யாழ். மாவட்டத்தில்
# மாதந்தோறும் ரூ. 1 கோடி 20 லட்சம் செலவாகிறதாம்

(யாழ்ப்பாணம்)
மதிய உணவிற்கென யாழ். மாவட்டத்திற்கு ஒருமாதம் ஒரு கோடி இருபது லட்சம் ரூபா செலவாகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குடா நாடெங்கும் உள்ள இரண்டு லட்சம் மாணவர் [illegible] லட்சம் ரூபா செலவாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நிவாரண உதவிகள் முற்றுமுழுதாக வழங்கப்படவில்லை

## நேரடித் தொடர்பு கொள்ளுமாறு அகதிகள் சங்கம் தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

கடந்தகால உள்நாட்டு குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கென வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் இலங்கை அரசு ஊடாக வழங்கிய உதவிகள் இதுவரை உரியவர்களுக்கு முற்றுமுழுதாக வழங்கப்படவில்லை. எனவே இதுகுறித்து உதவி வழங்கும் நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் வடக்கு – கிழக்கு அகதிகள் பாதிப்புற்றோர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. எம். ஜி. ஜேசுதாசன் தலைமையில் சில்லாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அகதிகளுக்கு கிடைத்துவந்த நிவாரண உதவிகள் தற்போது தடைப்பட்டிருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தின் விபரம் வருமாறு:

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குஅகதிகளாகச் சென்று மீண்டும் இங்கு திரும்பி வந்தவர்களுக்கும், உள்ளூரில் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கும் வெளிநாடுகளிலுள்ள உதவி வழங்கும் நிறுவனங்கள் இலங்கை அரசு மூலம் வழங்கிய உதவிகள் முற்றுமுழுதாக எமது வடக்கு கிழக்குப் பிரதேச மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஆகவே வடக்கு கிழக்கு அகதிகள் பாதிப்புற்றோர் சங்கம் வெளிநாடுகளிலுள்ள உதவி வழங்கும் நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களின் அந்த உதவிகளைப்பெற்று அகதிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் திரு. ஜேசுதாசன் தெரிவித்ததாவது:

''அண்மையில் சங்கத்தின் சார்பில் இந்தியா சென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியுடனும் மற்றும் உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி இந்தியாவில் தற்போதும் தங்கியிருக்கும் பல ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டேன். இதற்கிணங்க உதவித் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் கடற்றொழில் அமைச்சுக்கு ஊடாக யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்களை முதல்கட்டமாக வழங்கியுள்ளது என்றும், இதற்குப்பாராட்டும்நன்றியும் தெரிவிக்கும் அதேவேளையில் ஏனைய பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கும் இந்த மீன்பிடி உபகரணங்களை விரைவில் வழங்க ஆவன செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயப்பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுப்பது என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## சிங்கள மகாவித்தியாலய காணியில் மினிபஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சிங்கள மகாவித்தியாலய வளவு நேற்றுமுன்தினம் முதல் மினி பஸ் தரிப்பிடமாக மாற்றப்பட்டுள்ளது.

யாழ். நகரிலிருந்து சேவையை மேற்கொள்ளும் மினி பஸ்கள் இந்த வளவில் நிறுத்தப்பட்டு நேரஅட்டவணைப்படி பஸ் நிலையத்திற்கு வந்து பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன.

# வட்டுக்கோட்டையில் சைவ மாநாடு

(யாழ்ப்பாணம்)

வட்டு-சித்தன்கேணி கலாநிலைய ஆதரவில் சைவமாநாடு ஒன்று வட்டு திருஞானசம்பந்தர் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது.

கலாநிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் நடைபெறும்இம்மாநாட்டில் ''திருமுறை இசையரங்கு, பட்டிமன்றம், அருளிசை அரங்கு'' சொற்பொழிவு போன்றவை சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறுகின்றன.

இம்மாநாட்டின் தொடக்கவுரையை பேராசிரியர் சி, பத்மநாதன் நிகழ்த்துவார்.

திருமுறை இசையரங்கில் பண்ணிசைப்புலவர் திரு. வே. சிவஞானம் பாடுகிறார்.

''இன்றுள்ள சைவநடைமுறைகளிலே திருத்தம் அவசியம்'' என்னும் பொருளில் நடைபெறும் விவாத அரங்கின் நடுவராக கலாநிதி சி. க. சிற்றம்பலம் கலந்துகொள்வார்.

''பெரிய புராணம் காட்டும் பெண்கள்'' என்ற தலைப்பில் திருமதி மங்கையர்க்கரசி திருச்செல்வம் விரிவுரை நிகழ்த்துவார்.

# இயற்கை வளமும், சுவாத்தியமும் மனிதனுக்கு இன்றியமையாதவை

## 'கற்பகம்' திறப்பு விழாவில் உரை

(வண்ணார்பண்ணை)

''இயற்கைச் சுவாத்தியங்களுடன் வாழ்வதன் மூலமே சிறப்பானவர்களாகவும், சுகதேகிகளாகவும் மனிதர் வாழ முடியும். ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் இறைவனால் இயற்கையான வளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இயற்கை வளமும், இயற்கைச் சுவாத்தியங்களுமே அவ்வப் பகுதியில் வாழும் மனித உயர்களுக்கு இன்றியமையாதவையாகும். இறைவன் வகுத்த இயற்கைக்கு மாறாக நாம் வாழும் போதுதான் பலவித நோய் பிணிகளுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாகவேண்டி ஏற்படுகிறது. எமது பிரதேசத்தின் இயற்கை வளங்களில் முக்கியமாக விளங்குவது பனை வளமாகும். இந்த வளத்தை எமது மூதாதையர் சிறப்பாகப் பயன்படுத்திச் சுகமாகவும், திடகாத்திரமாகவும், செலவின்றியும் வாழ்ந்து வந்துள்ளதை நாம் அறியமுடிகிறது.''

மானிப்பாய் பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய ஆத்மஜோதி சிவத்திரு. நா. முத்தையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் பிரிவு அலுவலர் திரு. வி. திவ்வியராசா தலைமையில் நடந்த இத்திறப்புவிழா வைபவத்தை, பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களான சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா, திரு. எஸ். பாலசிங்கம், திரு. அ. மாணிக்கம், சபையின் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிலையத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்த திரு. முத்தையா மேலும் பேசுகையில், ''எமது நாட்டின் இயற்கை உணவுகளே எமது உடலுக்குப் பொருத்தமானவையாகும். இறக்குமதி உணவுகளைவிட எயது இயற்கையான உணவுகளே இன்றியமையாதவைகளாகும். வெளிநாடுகளில் இருக்கும் யாழ்ப்பாணத்தவர் ஏதாவது உடல் பாதிப்பு ஏற்பட்டால் பனை உணவுகளையே இங்கிருந்து பெறுகின்றனர். காரணம், அவர்கள் பிறந்து வாழ்ந்த மண்ணுக்குரிய–உடலுக்குத் தேவையான மூலிகை மருந்து இதுதான். பனைவளம் இறைவனால் எமக்குத் தரப்பட்டது.

''எமது மூதாதையர் பாவித்துவந்த வைத்திய ஏடுகளில் 'தாலமூல தைலம்' பிணி தீர்க்கும் ஒரு மருந்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தாலமூல தைலம்' என்றால் என்ன என்பதைப் பலர் புரிந்துகொள்ள முயலவில்லை.

தாலம் என்றால் பனை மூலம் என்றால் கிழங்கு பனங்கிழங்கின் மாவில் தயாரிக்கும் கூழ் தைலம் இதுஒடியற்கூழ் என்று நாம் கூறுகிறோம். இதைப் பாவிக்கும் எம்மவர்க்கு நோய் சேர்வது கடினம் என்று சொல்லப்படுகிறது. எமது இயற்கை வளத்தின் உணவுகளிலேயே எமது உடலுக்குத் தேவையான சகல மருந்துகளையும் இறைவன் தந்துள்ளான் என்பதை நாம் உணர முடிகிறது.

''தென் இந்தியாவில் உள்ள காந்திநிலையத்தில் அமைந்துள்ள நடனக்கல்லூரி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த நடன ஆசிரியர்கள் நடனக்கலைக்குப் பயன்படுத்தும் நகைகளை எமக்குக் காண்பித்தனர். மிகவும் அழகாகக் காட்சிதரும் அந்த நகைகள் பனை ஓலையினால் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை. பனைஓலையில் மணப்பெண்களுக்கு நகை அணிந்ததாக எமது நூல்களிலும் காணமுடிகிறது. எனவே இயற்கையோடு வாழ்வதும் இயற்கை வளங்களைப் பேணிப்பாதுகாப்பதும் இன்றைய எமது சமுதாயத்தின் பாரிய கடமையாகும்'' என்றார்.

## தமிழர் பிரச்னை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றார்.

வண பிதா ஜெயசீலன் அடிகள் வணபிதா குருஸ்சேவையர் வண.பிதா பயஸ் அடிகள் அறவழிகுழுச் செயலர் திரு. க. ஜீவகதாஸ், ரி.ஆர் ஆர.ஓ. உபதலைவர் திரு. மு. நல்லதம்பி ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்–நதியா
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2–30, 4-45
பயங்கரக் கராட்டிகள்
வாள்சண்டைகள், கார்
ஓட்டங்கள் நிறைந்த
படம்.
MAJESTIC
THUNDERBOLT
(C/scope)

## இலக்கிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் இலக்கியக் கருத்தரங்கு இம்மாதம் 25-ம் திகதி திரு. ஆ. தம்பித்துரை தலைமையில் குரும்பசிட்டியில் நடைபெறவுள்ளது.

''வைகாசி மாதப் பத்திரிகைச் சிறு கதைகள்'' என்னும் தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் பற்றி விமர்சன உரை நிகழ்த்தப்படும்.

திருவாளர்கள் க. வை. தனேஸ்வரன், கே. வி. இராசரத்தினம், ச. ஆ. இரகுபதி பால சிறிதரன், நாவண்ணன் ஆகியோர் விமர்சனவுரை நிகழ்த்துவார்கள்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தொகுப்புரை நிகழ்த்துவார்.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு முகப்புவயல் சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 24ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஜூலை மாதம் [illegible] திகதி தேர்த் திருவிழாவும், 3ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும்.

# யாழ். மாநகரசபையின் சுகாதார விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபைஅடுத்த மாதம் சுகாதார விழாவைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

வருடாந்தம் கொண்டாடப்படும் சுகாதார விழாவை இம்முறை மிகவும் விரிவான முறையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இவ்விழாவில் 'சுகாதார சுகவாழ்வு' சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு முதன்மை அளிக்கப்படும் என்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட கட்டுரை, பேச்சுப்போட்டிகள் சனசமூக நிலயங்களுக்கிடையே நடாத்தப்படும் என்றும் தேரிவிக்கப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

[பூநகரி]

பூநகரி மத்திய சனசமூக நிலைய பொதுக் கூட்டம்பூநகரி மகாவித்தியாலயத்தில் அதிபர் பொன். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். தலைவர் பா. சுரேஸ் குமார், உபதலைவர்: ந. திருஞானபவன், செயலாளர்: அ. பிறீம்றூபன், உபசெயலாளர்: ந. ஜெயரூபன், பொருளாளர்: க. ஸ்ரீதரன், விளையாட்டுச் செயலாளர் சி. பாஸ்கரன். நிர்வாக அங்கத்தவராக 5 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிபு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் மன்ற பணிமனையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் பின்வருமாறு;

தலைவர்: சட்டத்தரணி சோ. தேவராஜா, உபதலைவர்; க. க. ஞானேஸ்வரன், செயலாளர்; அழ. பகீரதன், உபசெயலாளர்: க. தனேஸ்வரன், பொருளாளர்; ஆர். நற்குணேஸ்வரன், கலைத்துறைத்தலைவர்; ந. புவீந்திரன், விளையாட்டுத்துறைத் தலைவர்; ந. செல்வச்சந்திரன், சிரமதான பிரிவுத் தலைவர்; ந. கிருஷ்ணதாசன். செயற்குழு உறுப்பினர்களாக ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

[யாழ்ப்பாணம்]

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நல்லூர் லயன்ஸ் கழக அங்குரார்ப்பண வைபவத்தில் பின்வருவோர் கழக உத்தியோகத்தர்களாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

தலைவர்கள்: மு. பரமேஸ்வரன், எஸ். ராமகிருஷ்ணன், வ. பரமசிவன், செயலாளர்: எம். கதிர்காமத்தம்பி, பொருளாளர்: எஸ். நந்தகோபால், லயன் ரேமர்; எ. தில்லை நடராசா

## அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினரின் கேள்வி ஒன்றுக்குக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இத்தகவலைத்தெரிவித்தார்.

## கொழும்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெறவிருக்கும் 'சார்க்' மாநாட்டின் முன்னோடியாகவே வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து அமைதிப் படை ஜூலை மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் வெளியேறாத பட்சத்திலே அடுத்த நாள் காட்மாண்டுவில் எழுப்பப்படும் என்றும் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ. நா. சபைக்கும், சர்வதேச நீதிமறத்திற்கும் இலங்கை இப்பிரச்னை தொடர்பாகக் கொண்டு செல்லவிருக்கும் பிரேரனை குறித்து இந்தியத் தரப்பில் கேள்வி எழுப்பப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது,

இதேவேளை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டில் பங்கு கொள்ள இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தயக்கம் காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சார்க் மாநாட்டில் சர்வதேசப் பிரச்னைகள் குறித்தும், உறுப்பு நாடுகளிடையேயான சில பிணக்குகள் தொடர்பாகவும் மற்றும் பல விடயங்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்படுமென்றும் சார்க் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்"

## ஈழவர் ஜனநாயக முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''இலங்கை இந்திய ஒப்பந்தமானது, இரு அரசாங்கங்களுக்கிடையே முரண்பட்ட நிலையை அடைந்து போய் இருப்பதால், இந்த ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்'' என்று ஈழவர் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

''வவுனியாவில் கடந்த 12ம் திகதி படுகொலை செய்யப்பட்ட எமது தோழர்கள் நாகரெட்ணம், மங்களேஸ், குணபால், ராமச்சந்திரன், சிவபாலன், வன்னி ஆகியோருக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பாக நாம் மேற்கொண்ட விசாரணையின் போது பெறப்பட்ட முக்கிய விடயங்களை இங்கு வெளிப்படுத்துகிறோம்.

''கடந்த 2ம் திகதி நயனமடு இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எமது தோழர் ஒருவரை விடுதலை செய்யக்கோரி தோழர் பாலகுமாரனின் கடிதத்துடன் மேற்படி ஆறுதோழர்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். 12ம் திகதி இந்த ஆறு பேரும் நயனமடு முகாம் அதிகாரியைச் சந்தித்தபின் அவர்களது வேண்டுதலுக்கு இணங்க வவனியா இந்திய இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றனர்.

''அன்று வவுனியா நகருக்கு சென்ற இவர்கள் பற்றிய தகவல்கள் இரண்டு நாட்களாக எமக்குக் கிடைக்காத நிலையில் 15ம் திகதியன்று தோழர் பாலகுமாரனின் பொறுப்பிலொரு குழு இவர்களைத்தேடி வவுனியா நகரம் சென்றது. வவுனியா நகரில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவ அதிகாரிகளை விசாரித்த பொழுது சவச்சாலையில் உள்ள ஆறு சடலங்களைச் சென்று பார்க்குமாறு பணிக்கப்பட்டனர்.

''சிவப்புத்துணிகள் வாய்க்குள் திணிக்கப்பட்டும், கண்கள் சிவப்புத்துணிகளால் கட்டப்பட்டும், இருவரது கைகள் துண்டாடப்பட்டும் கூரிய ஆயுதங்களால் முக்கிய உறுப்புக்கள் சிதைக்கப்பட்டும் எமது தோழர்கள் ஆறு பேரதுசடலங்களும் கிடக்கக் காணப்பட்டன. வவுனியா நகரில் அமைந்துள்ள அரிசி ஆலையொன்றின் உமிக்குள் கருக்கப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்த இச்சடலங்களைப் பொதுமக்கள் கண்டுகொண்ட பின்னர் சவச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. இவர்களது படுகொலைகுறித்து இந்தியப் படையிடம் விசாரித்தபோது ஆக்கபூர்வமான பதிலேதும் கிடைக்கவில்லை.

வவுனியா நகரில் வைத்து நிராயுதபாணிகளாகச் சென்ற எமது தோழர்கள் ஆறுபேரும் வஞ்சகமான முறையில் கொல்லப்பட்ட சம்பவமானது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் பட்டதென்ற முடிவுக்கே நாம் வருகிறோம். எமது செயற்பாடுகளை முடமாக்கும் நோக்குடன் முக்கிய பொறுப்பாளர்களை உள்ளடக்கிய இக்குழுவை அழித்தகற்றவேண்டுமென்ற எண்ணத்துடனேயே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் எமது அமைப்பின் உறுப்பினர் அமைதி வழிக்குத் திரும்பியவர்கள் இதுவரையிலும் 54 பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் சக இயக்கங்களாலும், இலங்கை, இந்திய இராணுவத்தினராலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வகையில் கடந்த கால அனுபவங்கள் மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்த ஷரத்துக்கேற்ப ஆயுதங்களை ஒப்படைத்து அதனை அனுசரித்துச் செல்வதென்பது இனிமேல் பொருத்தமற்ற நடைமுறையென்பதையும், இலங்கை-இந்திய ஒப்பந்தமானது இரு அரசுகளுக்கிடையே முரண்பட்ட நிலையில் அடைந்துபோய் இருப்பதால் இது மீள் பரிசீலனை செய்யப்படவேணடும் என்பதையும் நாம் வெளிப்படுத்த வேண்டியவர்களாகியுள்ளோம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்
(பூமணி)

தாவடி தெற்கை பிறப்பிடமாக கொண்டவரும் பம்பலப்பிட்டி (3B) அரசினர் தொடர்மாடி வீட்டில் வசிப்பவருமான திருமதி இராசம்மா சுப்பிரமணியம் காலமானார். இவர் காலம்சென்ற டாக்டர் சுப்பிரமணியம் (கணேசு) அவர்களின் அன்பு மனைவியும் இராஜேந்திரா (இணுவில் வீடியோ சென்ரர்), மகேந்திரா (சட்டத்தரணி கொழும்பு), மல்லிகா, சுபாஷினி, சுபோதினி ஆகியோரின் தாயாரும், விஜயகுமாரி, கதிரவேற்பிள்ளை (கால்நடை வைத்தியர் கொழும்பு), மகேஸ்வரி (ஆசிரியை நெல்லியடி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருசாந்தி (வேணி) (அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை இணுவில்), கிரிதரன் ஆகியோரின் அன்புப் பத்தியுமாவார். அன்னாரின் இறுதி சடங்கு 22-06-89 (இன்று) வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

**தகவல்: இ. அகிலன்**

''கணேச பவனம்''
தாவடி தெற்கு,
கொக்குவில்.

3 ''B'' அரசினர் தொடர்மாடி வீடு,
பம்பலப்பிட்டி,
கொழும்பு-4. (சி-2995)

### திரு. வைத்திலிங்கம் வடிவேலு

திரு. வைத்திலிங்கம் வடிவேலு அவர்கள் 21-6-89 இல் சிவபதமெய்தினார். புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் (புளியங்கூடல் சந்தி மகாமாரி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், பிரபல பத்திரிகை விற்பனையாளரும், உத்தரவு பெற்ற வர்த்தகருமாவார்.) இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், புளியங்கூடல் எரிபொருள் கூட்டுத்தாபன விநியோக முகவர் திரு.வ.போசராசா அவர்களின்அன்புத்தந்தையாரும், திருமதி போ. இந்திராதேவியின் அன்புமாமனாரும், செல்வன் உதயகுமார், செல்வி அஜந்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். காலஞ்சென்றவர்களான V. செல்லையா, தெய்வானைப்பிள்ளை, கந்தையா, சுப்பிரமணியம், செல்லையா (களுத்துறை), ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 22-6-89 (இன்று) வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுருவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்- வ. போசராசா.**

புளியங்கூடல் சந்தி.
ஊர்காவற்றுறை. (சி-2993)

### செல்வன் சண்முகம் உதயவர்மன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவரும் தற்போது கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய சண்முகம் உதயவர்மன் (பேபி) 19-6-89-ல் அகால மரணமானார்.

இவர் சபாரத்தினம் சண்முகம் (அதிபர் (புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வித்தியாலம்), மு/உமாமகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), சாந்தகுமார் B. Sc,, புவனேந்திரன் (மருத்துவபீட மாணவன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சரவணபவனின் பெருமகனும், குணரெத்தினம், சுந்தரேஸ்வரன் (புகையிரதப் பகுதி), சுந்தர்மூர்த்தி (லண்டன்) காலஞ்சென்ற திருமதி சேதுப்பிள்ளை, திருமதி சிவபாக்கியம், திருமதி கமலாதேவி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் புவனேஸ்வரி தம்பதிகளின் பேரனுமாமார்.

அன்னரது இறுதிக்கிரியைகள் இன்று (22-6-89) வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் அவரது கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ச. சண்முகம் (தகப்பன்)**

73, பலாலி ரோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [illegible]

## பருத்தித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை சிவசுப்பிரமணியம் (வயது 55), கந்தையா) பரமானந்தம் (வயது 42 மரியாம்பிள்ளை பீற்றர் (வயது 28) ஆகியோர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறையிலிருந்து சகல போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டன.

இச் சம்பவத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் சேதம் ஏற்பட்டது. மேல்மாடி ஜன்னல்கள் கண்ணடிகள் உடைந்து நொருங்கின.

## ஈழத் தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வருமாறு தூண்ட வேண்டிய காலம் இந்தியாவுக்கு வந்துவிட்டது'' என்று தெரிவித்துள்ளது.

அந்தத் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''செவுகளைக் கணக்கிலெடுக்காது இலங்கையில் சைப்பிரஸ் பாணியிலான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு புதுடில்லி தயாராக வேண்டும். 1987-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இந்தியத் துருப்புக்களை எதிர்த்துப் போராடி வருவோரையும் இத்திட்டத்துக்கு இந்தியா சேர்த்துக் கொள்ளவேண்டும்.

''இவ்வாறான நடவடிக்கை உலக ரீதியிலான அதிருப்தியைக் கிளறிவிடும் என்ற போதிலும் இத்திட்டம் இந்தியாவுக்கு பலத்த ஆதரவைப் பெற்றுதரும் என்பதை இலங்கை ஜனதிபதி திரு. பிரேமதாசா தெரிந்து கொள்ளவேண்டும்.''

இந்தியாவின் மற்றுமொரு பிரபல பத்திரிகையான ஹிந்துஸ்தான் டைம்ஸ்' தனது ஆசிரியத்தலையங்கத்தில், ''இந்தியப்படையை வாபஸ்பெறுமாறு தொடர்ச்சியாக கோருறதன் மூலம் ஜனதிபதி திரு. பிரேமதாசாசிக்கலுக்குள்ளாக்குகிறார்'' என்று தெரிவித்துள்ளது.

''இலங்கை ஜனதிபதி இதனை உணராமல் இலங்கை இந்திய உறவுகளுக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்துகிறார். ஒருநீடித்தகால விளைவு [illegible] என்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' கண்டித்துள்ளது.

## பல்கலைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் நேற்றுவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கல்லூரி மாணவர்களால் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் கோரி நடத்தப்படும் போராட்டத்திற்கு இதுவரையில் எந்தத்தரப்பினரிடமிருந்தும் நம்பிக்கை யூட்டும் வகையிலான பதில் கிடைக்கவில்லை,

''தமிழ் மாணவர்கள் அச்சத்துடனும், சுதந்திரமாகவும், பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டிருக்க முடியாமலும், பல்வேறு வழிகளிலும் மிரட்டப்பபடுவது எதிர் காலத்தில் ஒரு அடிமைத்தனம் மிகுந்த சமுதயாத்தை உருவாக்கும்,

''மாணவர்கள் ஆசிரியர்கள் எழுந்தமானமாக கைதுசெய்யப்படுவது சித்திரவதைசெய்யப்படுவது கொலை செய்யப்படுவது போன்ற செல்கள் எல்லோராலும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். எனவே மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரிக்கும் முகமாக இன்றும், நாளையும் வகுப்புக்களை பகிஷ்கரித்து எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாணவர்கள் தமது போராட்டங்களை சகமாணவர்களும் பங்குபற்றக் கூடிய வடிவங்களின் மூலம் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.''

## நயினை குருக்களை அரவம் தீண்டியது

(வேலணை)

நயினை நாகபூஷணி அம்பாளின் தீர்த்தோற்சவத்தின் போது கிரிகைகளை நடத்திக் கொண்டிருந்த சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்களுக்கு அரவம் தீண்டியது.

கும்பத்து நீரை அவர் அம்பாளின் விக்கிரகத்துக்கு ஊற்றியசமயம் கும்பத்திலிருந்து விழுந்த அரவம் ஒன்று அவரைத் தீண்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபத்தான நிலையில் அவர் கொட்டடி விஷக்கடி நிபுணர் திரு. க. சிற்றம்பலத்திடம் சிகிச்சை பெற்றதைத்தொடர்ந்து குருக்கள் தற்போது சுகமடைந்துவருகின்றார்.

## இணைப்புக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் இணைப்புக்குழு தனது அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இணைப்புக்குழுவினால் நேற்று விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில்; ''தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும்இவ்வேளையில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன இவற்றை நிறுத்தும்படியும். கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் சம்பந்தப்பட்டோரைக் கேட்டுக்கொள்கிறோம். நடைமுறையிலிருக்கும் வழி முறைகளினூடாகக்கூட தமது கருத்துக்களையோ, உணர்வுகளையோ வெளிப்படுத்த முடியாதஅவல நிலையில் தமிழ் மக்கள் இருப்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது'. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படகில் வந்த ஓட்டுநர் கே. அடிமை, மற்றும் எஸ். முருகேசன், இரா. சித்திர ஆனந்து, என் மகாராஜா, என் சுயம்பு நாடார், டி. கருப்புசாமி ஆகியோர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org